வளமான தமிழகம் !　　　　வலிமையான பாரதம் !

பாராளுமன்றத் தேர்தல் 2024

தமிழ் மாநில காங்கிரஸ் (மூ)

# தேர்தல் அறிக்கை







# தமிழ் மாநில காங்கிரஸ்
# பாராளுமன்றத் தேர்தல் அறிக்கை
# 2024

தமிழ் மாநில காங்கிரஸ் – தேசிய ஜனநாயகக் கூட்டணி கட்சிகளுடன் கூட்டணி அமைத்து தொடர்ந்து இந்தியாவை முன்னெடுத்து செல்வதற்கான ஒரு நல்ல கூட்டணி அமைத்து இருக்கிறோம். அரசியலில் நேர்மை, தனி வாழ்வில் எளிமை, ஊழலற்ற ஆட்சி அதிகாரம், வெளிப்படையான நிர்வாகம், மதுவில்லா தமிழகம் விலையில்லாக் கல்வி ஆகியவற்றை அளிப்பதுதான் தமிழ் மாநில காங்கிரசின் இலட்சிய முழக்கம். தமிழ் மாநில காங்கிரஸ் நிறுவனத் தலைவர் ஐயா ஜி.கே. மூப்பனார் அவர்களின் தாரக மந்திரமான வளமான தமிழகம் – வலிமையான பாரதம் அமைப்பதே இந்த வெற்றிக் கூட்டணியின் குறிக்கோள்.

மேலும், எங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தொகுதிகளில் வெற்றி பெறும்

உறுப்பினர்கள் இத்தேர்தல் அறிக்கையின்படி பணிகளை செயல்படுத்துவார்கள் என்று உறுதி அளிக்கிறோம்.

## 01. நதிநீர் இணைப்பு - நீர் மேலாண்மை திட்டம்

நம் இந்திய தேசத்தில் பல மாநிலங்களில் நதிநீர் இணைப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. அதேபோல் தேசிய அளவில் நதிநீர் இணைப்பு திட்டம் செயல்படுத்தி மத்திய BJP அரசு பல மாநிலங்களில் மழை வெள்ள காலங்களில் வீணாக கடலில் கலக்கப்படும் நீரை சேமித்து – தடுத்து பாசனத்திற்கு பயன்படுத்தும் “தேசிய அளவிலான நதிகளை இணைக்கும் மத்திய அரசின் முயற்சிக்கு” த.மா.கா. துணை நிற்கும். அதேபோல நமது மாநிலத்தில் ஓடும் நதிகளை இணைத்திடவும் த.மா.கா. குரல் கொடுக்கும். மேலும், காவிரி மற்றும் பாலாற்றில் மழை வெள்ள காலங்களில் பல டி.எம்.சி தண்ணீர் வீணாக கடலில் கலக்கிறது. இதை தடுத்து “தடுப்பணைகள்” கட்டி மழை

வெள்ள நீரை முறையாக பயன்படுத்த த.மா.கா. குரல் கொடுக்கும்.

## 02. மது விலக்கு

1971–க்கு பிறகு மது வாசனையே உணராத தமிழகத்தில் மதுக்கடைகளை திறந்து வைத்த அரசுகள் பின் நாட்களில் ஆண்ட – ஆளுகின்ற அரசுகள் அதையே விரிவுபடுத்தி இன்றைக்கு தெருவிற்கு தெரு "டாஸ்மாக்" மதுக்கடைகளை திறந்ததால் ஒரு தலைமுறையே பாழ்பட்டு கிடக்கிறது. மத்திய அரசுடன் இணைந்து மதுவிலக்கால் ஏற்படும் நிதி நெருக்கடியை சரி செய்து பூரண மதுவிலக்கை கொண்டு வர தமிழ் மாநில காங்கிரஸ் பாடுபடும்.

மேலும், மதுவுக்கு அடுத்தபடியாக போதை பொருட்கள் நடமாட்டம் தமிழகத்தில் இளைய சமுதாயத்தின் மத்தியில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்துகிறது. எனவே, போதை பொருட்களை முழுமையாக தடை செய்திட த.மா.கா. உறுதியான

கடுமையான சட்ட நடவடிக்கைக்கு உறுதி அளிக்கும். போதை பொருட்களை முற்றிலும் ஒழிக்க இரும்பு கரம் கொண்டு ஒடுக்குவோம்.

## 03. விவசாயம்

விவசாயிகள் விளைவிக்கும் விவசாய உற்பத்தி பொருட்களுக்கு உரிய ஆதார விலை கிடைக்க ஆவண செய்வோம். மத்திய அரசு விவசாயிகளுக்கு வழங்குகின்ற ஆதரவையும் – முன்னேற்றத் திட்டங்களையும் தமிழ் மாநில காங்கிரஸ் வரவேற்கிறது. மத்திய, மாநில அரசுகளே “குறைந்தபட்ச ஆதார விலை” நிர்ணயம் செய்யவும், விளை பொருட்கள் இடைத் தரகர்களிடம் செல்லாமல் நேரடியாக விவசாயிகள் விற்பனை செய்யவும், மதிப்புகூட்டி விற்பனை செய்யவும், மத்திய அரசுடன் இணைந்து விவசாயிகளின் நலம் காத்திட த.மா.கா. துணை நிற்கும்.

மேலும், தென்னை விவசாயிகளின் நலன் காக்க கொப்பரை தேங்காய்க்கு உரிய விலை

கிடைத்திடவும், மானியம் கொடுத்து ரேசன் கடைகளில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பாமாயிலுக்கு பதிலாக தேங்காய் எண்ணெயை விற்பனை செய்திட உரிய ஆக்கபூர்வ நடவடிக்கை எடுக்கப்படும்.

மானாவாரி பயிர்களான உளுந்து, பயறு போன்ற பயிர்களுக்கு உற்பத்திக்குத் தேவையான விதை, உரம், பூச்சி மருந்து போன்ற அனைத்து அரசு உதவிகளும் மானிய விலையில் கிடைக்கப் பாடுபடுவோம்.

## 04. மகளிர் நலன்

தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி ஏற்ற பின் பாரத பிரதமர் மோடி அவர்களின் தலைமையில் குடும்ப தலைவிகளுக்கான திட்டங்கள் பெரும் அளவில் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன. குறிப்பாக இலவச எரிவாயு இணைப்பு, பெண்களுக்கான வங்கி கணக்குகள், குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து இயக்கத்

திட்டம், பெண் குழந்தைகளுக்கான வங்கி கணக்குகள் மூலம் ஐம்பது சதவீதத்திற்கான மேலான மகளிர்கள் பயனடைந்து கொண்டு இருக்கிறார்கள். இத்திட்டங்கள் தமிழகத்தில் மேலும் விரிவாகவும் அதிக எண்ணிக்கையில் குடும்ப தலைவிகளை சென்றடைய தமிழ் மாநில காங்கிரஸ் துணை நிற்கும்.

## 05. பாலியல் குற்றங்கள்

சமீப காலங்களில் பாலியல் குற்றங்கள் குறிப்பாக குழந்தைகள் மீதான பாலியல் குற்றங்கள் அதிகரித்து வருவது மிகுந்த அதிர்ச்சியையும், வேதனையையும் அளிக்கிறது. இக்குற்றவாளிகள் மீது விதிக்கப்படும் தண்டனைகள் அதிகபட்சமாக இருக்க வேண்டும். குற்றம் நிரூபிக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனையான மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும். இதனை சட்டவடிவமாக்க மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு தமிழ் மாநில காங்கிரஸ் உறுதியாக துணை நிற்கும்.

## 06. தொழிலாளர் நலன்

அனைத்து தொழில்களும் சிறு குறு தொழில்களும் இலாபகரமாக செயல்பட வேண்டும். அதன் மூலம் தொழிலாளர்கள் நலம் பெற வேண்டும். அதேபோல் நெசவாளர்களின் துயர் துடைக்கப்பட வேண்டும். கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவு தொழிலாளர்கள் காப்பாற்றப்பட வேண்டும். சாயப் பட்டறைகளினால் நகரத்தில் சாக்கடைகள் ஆகியவற்றில் உருவாகும் கழிவுநீர் – நீர் நிலைகளை மாசுப்படுத்தி வருகிறது. இதனைத் தடுக்க நீண்ட குழாய்கள் அமைத்து RO மூலம் தூய்மைப்படுத்தி கழிவு நீரை கடலில் கலக்கும் திட்டத்தை மத்திய அரசுடன் இணைந்து வகுக்க எங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாடுபடுவார்கள்.

2022 முதல் ஓய்வு பெற்ற போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியப் பணப் பயன்கள் முழுமையாகக் கிடைக்க தமிழ் மாநில காங்கிரஸ் பாடுபடும்.

1995–ல் அமுல்படுத்தப்பட்ட புதிய பென்ஷன் திட்டத்தின்படி மத்திய, மாநில அரசு மற்றும் அரசு பொதுத்துறை நிறுவனங்களில் பணி செய்யும் பணியாளர்கள் மிகக் குறைந்த பென்ஷன் பெற்று வருகிறார்கள். அவர்களுக்கு குறைந்தபட்சம் மாதம் ரூ.9,000/– வழங்க ஆவண செய்யப்படும்.

உயர்நீதிமன்ற – உச்சநீதிமன்ற உத்தரவுப்படி ஊதிய ஒப்பந்தப் பேச்சு வார்த்தையை தமிழக அரசு துவக்கவும், இடைக்கால நிவாரணமாக மாதம் ரூ.3000/– வழங்கவும் தமிழ் மாநில காங்கிரஸ் முயற்சி செய்யும்.

## 07. மீனவர் நலன்

தமிழக மீனவர்கள் குறிப்பாக இராமநாதபுரம், புதுக்கோட்டை, நாகை மீனவர்கள் தொடர்ந்து இலங்கை கப்பல் படையால் கைது செய்யப்படுவதும் – படகுகளை பறிமுதல் செய்வதும் மத்திய வெளியுறவு துறை அமைச்சகத்தால் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. இப்பிரச்சனைகளுக்கு நிரந்தர தீர்வு காண புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு

மத்திய அரசின் உதவியோடு நிரந்தர தீர்வு காணப்படும். மேலும் மீன் பிடிப்பு தடைக் காலங்களில் மீனவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை தற்சமயம் வழங்குவதைவிட அதிகமாக வழங்குவதற்கு நாங்கள் பாடுபடுவோம்.

## 08. தாழ்த்தப்பட்டோர் - பழங்குடியினர்

கல்வி மற்றும் தொழிற்துறைகளில் SC/ST பிரிவுக்கான காலிப் பணியிடங்கள் நிரப்புவதற்கும் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் மத்திய அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வேலை வாய்ப்புகளை வழங்கி வருகிறது. வரும் காலங்களில் இதனை அதிகப்படுத்துவதற்கான முயற்சிகளை தொடர்ந்து நாங்கள் மேற்கொள்வோம்.

## 09. சிறுபான்மையினர் நலன்

1. சிறுபான்மை முஸ்லிம்களுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் 5% இட ஒதுக்கிடு பெற்றுத்தர துணை நிற்போம்.

2. தலித் கிறிஸ்துவர்கள் தங்கள் உரிமைகளை பெற துணை நிற்போம்.

3. உலமாக்களுக்கு இருசக்கர வாகனம் (Scooter) வழங்கிட நடவடிக்கை எடுப்போம்.

4. இஸ்லாமிய பள்ளி வாசல்களை புணரமைக்க சிறப்பு நிதி வழங்க நடவடிக்கை எடுப்போம்.

5. புனித ஹஜ், ஜெருசலம் செல்பவர்களுக்கு சிறப்பு மானியம் அரசு வழங்க நடவடிக்கை எடுப்போம்.

6. பொருளாதரத்தில் பின்தங்கிய இஸ்லாமிய பெண்களின் திருமணத்திற்கு 50 ஆயிரம் மானியம் வழங்க நடவடிக்கை எடுப்போம்.

## 10. கல்வி

தனியார் சுயநிதிக் கல்லூரிகளில் கல்வி வியாபாரம் ஆவதை தடுக்க, புதிய கல்லூரிகள் துவங்க அனுமதி வழங்கும் முறையில் புதிய கோட்பாடுகள் வகுக்க வேண்டும். அதற்கு நாங்கள் துணை நிற்பதுடன் அரசு மற்றும் அரசு உதவி

பெறும் பள்ளிகள், கல்லூரிகள் தரமாகவும் – சிறப்பாகவும் செயல்பட பாடுபடுவோம். கல்வி என்பது வியாபார பொருள் அல்ல. இதனைத் தடுப்பதற்கு பெருந்தலைவர் காமராஜர் காலத்து கல்வி மறுமலர்ச்சியை மீண்டும் அரங்கேற்ற வேண்டும். மத்திய அரசின் பள்ளிகளான நவோதயா, கேந்திரியா வித்யாலயா போன்ற பள்ளிகளில் கட்டாயத் தமிழ் பாடத்துடன் கூடிய கல்வி முறையை தமிழகத்தில் அமல்படுத்தி, அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் தரமான கல்விக் கிடைக்க பாடுபடுவோம். "தரமான கல்வி", "இலவசக் கல்வி" என்பதே எங்கள் தாரக மந்திரம்.

## 11. கனிம வளம்

கனிம வளங்கள் குறிப்பாக தாது மணல், ஆற்று மணல், கிரானைட் குவாரிகள் போன்றவற்றால் இயற்கை வளங்கள் சுரண்டப்படுகிறது. இதன் மூலம் நீராதாரம் மிகவும் பாதிக்கப்படுகிறது. மேலும், நிலத்தடி நீர் மட்டம் குறைகிறது. இதனால்

புவி வெப்பமயமாதல் அதிகரிக்கிறது. எனவே, இவை தேசிய பேரிடராக கருதி இவைகளைத் தடுக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுப்போம்.

## 12. இளைஞர் நலன்

உலகிலேயே பதினெட்டு வயதிலிருந்து முப்பது வயது வரை உள்ள "இளைஞர் சக்தி"யை இந்தியா பெற்று முதலிடம் வகிக்கிறது. எனவே எதிர்கால திட்டங்கள் அரசின் தனிக்கவனம் இளைய சமுதாயத்தை நோக்கி இருந்தால்தான் இந்தியா வல்லரசாக ஒரு நல்லரசாக உயர முடியும். இதை நன்கு உணர்ந்த நம் பாரத பிரதமர் தொடர்ந்து இளைஞர்களை ஊக்குவித்து வருகிறார்கள். தமிழ் மாநில காங்கிரஸ் இம்முயற்சிகள் தொடர்ந்து வெற்றி பெற துணை நிற்கும்.

இளைஞர் நலன் காக்க பள்ளி, கல்லூரி முடித்த இளைஞர்களுக்கு இறுதி ஆண்டில் கட்டாய புதிய தொழில் முயற்சிக்கான பயிற்சி, புதிய

வணிக திட்ட செயலாக்க முயற்சி திட்டம் செயல்படுத்தப்படும்.

## 13. மாணவர் நலன்

மத்திய அரசு உதவியுடன் தமிழகம் முழுவதும் உள்ள அரசு பள்ளி, கல்லூரிகளில் மற்றும் தனியார் பள்ளி, கல்லூரிகளில் தேவையான வகுப்பறைகள், ஆய்வகம், விளையாட்டு மைதானம், கழிப்பிட வசதி, தூய குடிநீர் வளாகம் சுற்றுச்சுவர் மற்றும் உரிய பாதுகாப்பு, கண்காணிப்பு கருவி போன்ற அடிப்படை கட்டமைப்புகள் மேம்படுத்தவும் ஆறு மாதத்திற்கு ஒருமுறை ஆய்வு செய்யவும், ஒரு நிர்வாகக் குழு அமைக்க வலியுறுத்துவோம்.

## 14. நீதித் துறை

தமிழகம் முழுவதும் உள்ள கீழமை நீதிமன்றங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், கீழமை நீதிமன்றங்களில் தொழில் புரியும் திறமைமிக்க வழக்கறிஞர்களையும்,

சென்னை மற்றும் மதுரை உயர்நீதிமன்றங்களில் நீதிபதி பதவிக்கு பரிசீலிக்க நீதித்துறை மூலமாக முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மேலும், "பெண் வழக்கறிஞர்"களுக்கு உரிய பிரதிநிதித்துவம் நீதிபதி நியமனத்தில் வழங்கிட முயற்சிகள் செய்வோம்.

தமிழ் மொழியை உயர்நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாக அறிவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## 15. மத நல்லிணக்கம்

மத்தியில் சிறப்பான மத சார்பற்ற அரசு அமைந்து இருக்கிறது. எல்லோரும் அவரவர் மதத்தினை பின்பற்றி அமைதியோடு வாழவும் – மதத்தின் அடிப்படையில் சமுதாய வேற்றுமையை தூண்டிவிடும் வகுப்புவாத சக்திகளை வேரறுக்கவும் தொடர்ந்து பாடுபடுவோம். பெரும்பான்மை மக்களுக்கும்,

சிறுபான்மை மக்களுக்கும் இணைப்பு பாலமாக செயல்படுவோம்.

## 16. முதியோர் - ஆதரவற்றோர் நலன்

மாவட்டங்கள் தோறும் ஆதரவற்றோர் – முதியோர் நலன் கருதி முதியோர் இல்லங்கள் அமைக்கப்படும். மேலும் அவர்களுக்கு தரமான உணவும், உடை மற்றும் மருத்துவ வசதிகளும் செய்து தரப்படும்.

## 17. சுகாதாரம்

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

இப்பழமொழிக்கு ஏற்ப தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசின் சுகாதார காப்பீட்டுத் திட்டமான ஆயுஷ்மான் திட்டத்தின் மூலம் பாரத பெருமக்கள் பெரிதும் பலனடைந்து வருகிறார்கள். "மக்கள் மருந்தகத்" திட்டத்தின் மூலம் சாதாரண குடிமக்களுக்கு மிகக் குறைந்த விலையில் தரமான மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன. பெரிதும்

பலன் அளிக்கக் கூடிய இத்திட்டம் தமிழகத்தில் பேரூராட்சி – நகர – வட்டார – கிராமங்களில் விரிவுப்படுத்துவதற்கான முயற்சியை தமிழ் மாநில காங்கிரஸ் மேற்கொள்ளும்.

## 18. நிலத்தடி நீர் மேலாண்மை

நிலத்தடி நீர் வழங்கலை மேம்படுத்தவும் நிலத்தடி நீரை பாதுகாக்கவும் புதியத் திட்டங்கள் தீட்டப்படும். மாநில முழுவதும் ஆக்கிரமிக்கப்பட்ட ஆறுகள், குளங்கள், குட்டைகள், கன்மாய்கள் மற்றும் நீர்ப்பிடிப்பு பகுதிகளை கண்டறிந்து ஆக்கிரமிப்புகளை அகற்றி தூர்வாரப்படும்.

இவ்வகையான நீர் ஆதாரங்களில் கழிவு மாசு, சாக்கடைக் கழிவு, சாயக் கழிவு, குப்பைக் கூளங்கள் கலப்பதை தடுக்க போர்க்கால நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், மழைக் காலங்களில் மழை நீர் வீணாகி சாக்கடையில் ஆற்றில் கலந்து கடலுக்கு வீணாக சென்று கலப்பதை தடுத்து “மழை நீர் சேமிப்பு பரவலாக்கத் திட்டம்” வகுக்கப்படும்.

## 19. காவிரி

கச்சத்தீவு, முல்லைப் பெரியார், காவிரி, பாலாறு, மேகதாது போன்ற பிரச்சினைகள் தமிழகத்தின் தீர்க்கப்படாத பிரச்சினைகளாக இருக்கின்றன. உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தப் பிறகும் அந்தத் தீர்ப்பை நிறைவேற்றாமல் கேரள அரசும் – கர்நாடக அரசும் முரண்டு பிடிக்கின்றன. இவைகளை மத்திய அரசுடனும் அனைத்து கட்சிகளுடனும் சேர்ந்து தீர்ப்பதற்கு நாங்கள் பாடுபடுவோம்.

காவிரியில் – மேகதாதுவில் கர்நாடக அரசு அணைக் கட்டுவதை அனுமதிக்கக் கூடாது. இதை தமிழ் மாநில காங்கிரஸ் முழுமையாக எதிர்க்கும்.

## 20. தமிழ் - கலை - இலக்கியம்

நமது பிரதமர் மாண்புமிகு நரேந்திர மோடி அவர்கள் தமிழ் மொழி மீதும் திருமறை திருக்குறள் மீதும் அளவில்லா பற்றுடன் இருக்கிறார்கள்.

உலகம் முழுமைக்கும் திருக்குறளை பரப்ப வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளுடன் பணியாற்றுகின்றார்கள். திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க வேண்டும் அதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்படும்.

## 21. ஊழல் அற்ற நிர்வாகம்

இன்றைய அரசியல் ஊழல் நிறைந்துள்ளது. சாதாரண குடிமகன் முதல் உயர் அதிகாரிகள் தொடர்ந்து உயர் பதவிகள் வகித்து வரும் அரசியல் தலைவர்கள் பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகள் நீதிமன்ற வழக்கு, சிறைவாசம், போன்ற செய்திகள் சமுதாயத்திற்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக உள்ளது. எனவே சமுதாயம் குறிப்பாக இளைய சமுதாயம் ஊழல் மற்றும் மக்கள் விரோத வன்முறை கலாச்சாரத்திற்கு எதிராக அணி திரண்டு பெருந்தலைவர் காமராஜர் பாதையில் தலைவர் மூப்பனார் காட்டிய வளமான தமிழகம்! வலிமையான பாரதம்! படைக்க தலைவர்

ஜி.கே.வாசன் அவர்களின் தூய அரசியலுக்கு துணை நிற்போம். வாரீர் ஒன்றுபடுவோம்! வெல்வோம்!

## 22. பாராளுமன்றம் - சட்டமன்றம்

தற்சமயம் பாராளுமன்ற நிகழ்ச்சிகள் அனைத்தும் தொலைக்காட்சிகள் நேரடி ஒளிபரப்பு செய்கிறது அதேபோல் சட்டமன்ற நிகழ்ச்சிகளும் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட வேண்டும் என்பதற்கு ஆதரவாக நாங்கள் செயல்படுவோம்.

## 23. இஸ்ரோ குலசேகரப்பட்டிணம்

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள குலசேகரப் பட்டிணத்தில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் (இஸ்ரோ) புதிய ஏவுகணை வளாகத்திற்கு பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் அடிக்கல் நாட்டி இருக்கிறார்கள். தூத்துக்குடி மாவட்ட பகுதியில் உள்ள அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் உள்ளிட்ட தகுதி பெற்ற மண்ணின் மைந்தர்கள் அனைவருக்கும் வேலை

வாய்ப்பில் முன்னுரிமை பெற தமிழ் மாநில காங்கிரஸ் துணை நிற்கும்.

❖ ❖ ❖

வளமான தமிழகத்தையும் – வலிமையான பாரதத்தையும் உருவாக்குவதே எங்கள் நோக்கம். நேர்மை – எளிமை – வெளிப்படைத் தன்மை இம்மூன்றுமே நல்ல நிர்வாகத்தின் முக்கிய அம்சங்கள். இவைகளை மத்தியில் ஆளுகின்ற தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு தொடர்ந்து செயலாற்றி கொண்டு வருகிறது. இது தொடர, மீண்டும் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு பெரும் அளவில் வெற்றி பெற வேண்டும். மீண்டும் பாரத பிரதமர் மோடி அவர்கள் மூன்றாவது முறையாக பிரதமராக பதவியேற்க தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர்களுக்கு தமிழக வாக்காளர்கள் வாய்ப்புகளை அளிக்க வேண்டும். இந்த உறுதிமொழிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்று வாக்காளப் பெருமக்களுக்கு உறுதி அளிக்கிறோம்.



## பாராளுமன்றத் தேர்தல் 2024

# தமிழ் மாநில காங்கிரஸ் ( மூ )

## வேட்பாளர்கள்

திரு. V.N. **வேணுகோபால்** B.A.

**ஸ்ரீபெரும்புதூர்**

திரு. P. **விஜயகுமார்** DECE

**ஈரோடு**

திரு. S.D.R. **விஜயசீலன்** B.Sc.

**தூத்துக்குடி**

## வாக்களிப்போம்



## சைக்கிள் சின்னத்திற்கே